# கண்ணீரின் பாதையில் வெற்றி!



சகோதரி-மார்கிரேட் ஸ்தீரா

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# கண்ணீரின் பாதையில்

# வெற்றி

சகோதரி. மார்கிரெட்ஸ்திரா

A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006.
Tamil Nadu

வெளியீடு :- அன்பு மலர்கள்
C/o. Bro. Anand
ரேணு லேப்
தென்னூர், திருச்சி-17.

# பொருளடக்கம்

1. இளமைப்பருவம்

2. கண்ணீரின் ஊற்றுகள்

3. பாதுகாத்த கரங்கள்

4. அழுகையின் பள்ளத்தாக்கு

5. அரவணைத்த கரங்கள்

6. வெற்றி வாழ்க்கை

# இளமைப் பருவம்

''ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை'' — ஏசாயா 49:15.

மேற்கண்ட இந்த அருமையான வேத வச னத்தின்படி தாயினும் மேலாய் என்மேல் பாசம் வைத்த என் அருள் நாதர் இயேசுகிறிஸ்து என் தாயின் வயிற்றில் நான் உருவாகும் முன்பே என்னைத் தமக்கெனத் தெரிந்து கொண்டார். என் பெற்றோர் கிறிஸ்துவின் அன்பில் என்னை நடத்த அறியாதிருந்தாலும் அவர் அற்புதமாய் என் வாழ்வில் இடைப்பட்டு அவரே எனக்குத் தாயும், தகப்பனுமாயிருந்து நடத்தி வருகிறார்.

என் பெற்றோர் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிகுந்த செல்வாக்குடன் எஸ்டேட்டில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நான் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தேன். நான் கடைசிப் பிள்ளையாக இருந்ததால் என் பெற்றோரும், சகோதரனும், சகோதரிகளும் என்னை மிகுந்த செல்லமாக வளர்ந்து வந்தார்கள். நான் எதைக் கேட்டாலும் அதை எனக்கு வாங்கிக் கொடுப்பார்கள். கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாதவளாய் வளர்ந்தேன். எங்கள் பெற்றோர் கிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களாக இருந்தாலும் அவர்கள் எங்களை நல்லொழுக்கத்தில் வளர்க்கத் தவறவில்லை. மிகுந்த கட்டுப்பாட்டுடன் நாங்கள் வளர்க்கப்பட்டோம்.

அப்பொழுது நாங்கள் இருந்த எஸ்டேட்டில் இயேசுவைப் பற்றி ஞாயிறு கிழமை தோறும் சிறுபிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஓய்வு நாள் பாடசாலைக்கு என் வயதையொத்த சிறுமிகளுடன் சேர்ந்து விளையாட்டாக பொழுதுபோக்குக்காகப் போக ஆரம்பித்தேன். ஆனால் அங்கு சொல்லப்பட்ட இயேசுவைப் பற்றிய சத்தியம் என்னை அதிகமாகத் தொட்டது. இயேசுவைப் பற்றி மென்மேலும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் எனக்கு அதிகமாக ஏற்பட்டது. அதன் பிறகு நான் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் அந்த ஓய்வு நாள் பாட சாலைக்குச் சென்றேன்.

அப்பொழுதிலிருந்து நான் எதைச் செய்தாலும் இயேசு என்னைப் பார்க்கிறார் என்ற எண்ணம் என் மனதில் ஆழ மாகப் பதிந்தது.

என்னை அறியாமல் கர்த்தருக்குப் பயந்து தீமையான காரியங்களை விட்டு விலகி நடக்க ஆரம்பித்தேன். எல்லா வற்றிற்கும் மேலாய் இயேசு கிறிஸ்து மீண்டும் இந்த உலகத் திற்கு வந்து நம் செயல்களுக்குத் தக்கதாய் நம்மை நியாயம் விசாரிப்பார் என்ற சத்தியம் என்னை அதிகமாக ஆட் கொண்டது. ஆகவே எல்லோரிடமும் ''இயேசுகிறிஸ்து சீக் கிரம் வருவார். ஆகவே நாம் தப்பு செய்யக்கூடாது'' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதைப் பார்த்து அங்கிருந்த சில அண்ணாச்சிகள் ''இயேசுகிறிஸ்து இன்றைக்கு இரவு வரப்போகிறார். ஜாக்கிரதையாயிரு'' என்று என்னைப் பார்க்கும் போதெல்லாம் கேலி செய்தனர். என் பிஞ்சு உள்ளத்தில் இயேசுவே மெய்யான தெய்வம் என்ற எண் ணம் ஆழமாய்ப் பதிந்திருந்ததே தவிர இயேசுவின் அன்பைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளுமளவு எனக்கு மனப் பக்குவம் (Maturity) இல்லை.

என்னுடைய உண்மையும், நேர்மையும் என் பெற்றோருக்கு என்மீது அதிக நம்பிக்கையைக் கொண்டு வந்தது. ஆகவே அவர்கள் நான் கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வதற்குத் தடையொன்றும் விதிக்கவில்லை. நான் பெண்பிள்ளையாயிருந் தாலும் என்னை ஆண்பிள்ளையைப் போல் வளர்த்தார்கள். என்னை அதிகமாகப் படிக்க வைத்து மருத்துவராக ஆக்க வேண்டுமென்கிற ஆவல் என் பெற்றோருக்கு அதிகமாக இருந் தது. ஆகவே அவர்கள் என்னை உற்சாகப்படுத்தி நன்கு படிக்கச் சொன்னார்கள். நானும் என் வகுப்பிலேயே முதல் மாண வியாகத் திகழ்ந்தேன்.

இவ்வாறாக என் பனிரெண்டாம் வயது வரை ஒரு குறையுமில்லாமல் வளர்ந்தேன். தாய்க்கோழி தன் குஞ்சு களை செட்டையின் மறைவிலே வைத்துப் பத்திரமாகப் பாதுகாப்பது போல என் தாயும் எங்களைக் கருத்துடன் பாதுகாத்து, பராமரித்தார்கள். நான் என் பெற்றோர்தான் வாழ்க்கை என்று இருந்தேன். அவர்களை விட்டுப் பிரிந்து வேறு எங்கும் போகவே மாட்டேன். என் தந்தை தொழிலி

லும் முன்னேற்றம் ஏற்பட்டது. எங்கள் வீட்டில் பணத்திற்கும், பொருள்களுக்கும் குறைவேயிருந்ததில்லை. என் தகப்பனார் ஒரு அமைதியான மனிதர். அவர் யாருக்கும் ஒரு தீங்கும் செய்யமாட்டார். நீதிக்காகப் பாடுபடுவார். ஆகவே நாங்கள் இருந்த இடத்தில் மக்கள் அவரை மிகவும் மதித்தார்கள். எந்தக் குடும்பத்தில் பிரச்சனையென்றாலும் உடனே அவர்கள் என் அப்பாவைத்தான் தேடி வருவார்கள். அவர் தான் நியாயம் விசாரித்து பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார். எங்கள் குடும்பம் அனைவராலும் போற்றப்பட்டது.

எங்கள் அப்பா மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வேலை செய்து சம்பாதித்து வந்ததால் எங்கள் வீட்டில் போதுமான செல்வம் இருந்தது. எங்கள் அப்பா அதைக் கொண்டு ஒவ்வொரு பருவத்துக்கும் (Season) அதற்கேற்றாற் போல் ஒவ்வொரு வியாபாரம் செய்து பிள்ளைகளாகிய எங்களுக்காக அதிகமாக சம்பாதித்தார். ஆனாலும் என் இளம் பருவத்தில் நான் என் குடும்புத்தில் ஒரு மெய்யான சமாதானத்தைப் பார்க்கவில்லை. எப்போதும் காரணமற்ற சண்டைகளும், பிரச்சனைகளும் எங்கள் குடும்பத்தை ஆட்கொண்டிருந்தது. என் பெற்றோர் சாஸ்திரம், சம்பிரதாயம், மந்திரம், ஜோசியம் ஆகியவற்றில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தனர். எங்கள் வீட்டில் எந்த ஒரு நன்மையான காரியம் நடந்தாலும், தீமையான காரியம் நடந்தாலும் உடனே எங்கள் வீட்டில் ஜோசியக்காரனைப் பார்க்கலாம்.

என் சகோதரிகளுக்கு மாப்பிள்ளை வந்தால் உடனே ஜோசியக்காரனைத்தான் அழைத்து, ஜோசியம் பார்ப்பார்கள். என் அண்ணனுக்குக் குழந்தை பிறந்தவுடன் ஜோசியக்காரனை அழைத்து ஜாதகம் எழுதினார்கள். என் பெற்றோர் ஜோசியத்தின் படிதான் நடப்பார்கள். நானும் வேடிக்கையாக அவர்கள் அருகில் இருந்து அதைப் பார்த்திருக்கிறேன். ஆனாலும் அவற்றையெல்லாம் பார்க்கும் போது என்னையும் அறியாமல் எனக்குள் ஒருவித திகிலுடன், வெறுப்பும் ஏற்பட்டு நான் அவற்றை விட்டு ஒதுங்கி நிற்க ஆரம்பித்தேன். என் பெற்றோர் நம்பிய சாஸ்திரம், சம்பிரதாயம், ஜோசியம், மந்திரம், பூஜை ஆகியவற்றால் என் குடும்பத்திற்குச் சமாதானத்தைக் கொடுக்க முடியவில்லையே என்ற எண்ணம் என்னை அதிகமாக ஆட்

கொண்டது. சமாதானப் பிரபுவாகிய இயேசுவைப் பற்றி
நான் சற்று அறிந்திருந்தாலும் என் குடும்பத்தினர் அவரை
அறிய முற்பட வில்லை. அவர்கள் தங்கள் பாரம்பரியங்களி
லேயே தங்கள் நாட்களைக் கடத்தினார்கள்.

என் குடும்பத்தில் சமாதானமற்ற சூழ்நிலை காணப்
பட்டாலும் என் பெற்றோர் ஒரு கஷ்டமும் தெரியாமல்
என்னைச் செல்லமாக வளர்த்தனர். நான் என் பெற்றோ
ரிடம் அடி வாங்கினதே இல்லை. ஆதியாகமம் 37:2-ன்
படி நான் யோசேப்பைப் போல் என் சகோதரிகள் செய்யும்
தவறுகளில் ஈடுபடாமல் அவர்களைப் பற்றி என் பெற்
றோரிடம் சொல்லி விடுவேன். இன்று நான் என் பிள்ளை
களைக் கண்டிப்பாக வளர்ப்பதுபோல் கூட என் பெற்
றோர் என்னைக் கண்டித்து வளர்க்கவில்லை. ஆனாலும்
இயேசு கிறிஸ்து என்னைத் தெரிந்து கொண்டதினிமித்தம்
அவர் அந்தச் சிறுபிராயத்திலேயே என் பாதைகளைச் செவ்
வைப்படுத்தி நடத்தினார். என் இளம் பிராயத்தைப் பற்றி
நான் சொல்லப் போனால் கண்ணீர், கவலை, துக்கம்,
என்றால் என்னவென்றே அறியாத காலம்தான் என் இள
மைப் பருவம் என்று சொல்வேன். அந்த காலம் மகிழ்ச்சி
யின் காலம். இளமைப் பருவம் எனக்கு இனியப் பருவம்.

# கண்ணீரின் ஊற்றுகள்

இனிமையாய் ஓடிக்கொண்டிருந்த எங்கள் குடும்பக் கப்பலைத் திடீரென்று கொடிய சூறாவளி தாக்கியது. எங்கள் வாழ்க்கை நிலை தலைகீழாக மாறியது. எங்கள் குடும்பத்தின் மீது காரணமின்றி பொறாமை கொண்ட ஒரு நபர் எங்களுக்கு விரோதமாகக் கொடிய செய்வினை செய்து விட்டார். எங்கள் குடும்பத்தைத் தூணாய்த் தாங்கி நடத்தி வந்த என் அம்மாவுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டது. அவர்கள் சுயநினைவையிழந்தார்கள். தனக்குத் தானே பேச ஆரம்பித்தார்கள். நாளடைவில் அந்த நிலை முற்றி வீட்டை விட்டு ஓட ஆரம்பித்தார்கள். எங்களைப் பாதுகாத்துப் பராமரித்து வந்தத் தாயை நாங்கள் பாதுகாக்க வேண்டியதாயிற்று.

ஒரு குருவியின் கூட்டைக் குருவிக் குஞ்சுகளுக்கு இறகு முளைக்கும் முன் யாராவது கலைத்து விட்டால் அக்குஞ்சுகள் பறக்க வழியின்றி எப்படிப் பரிதவிக்குமோ அதே போல் நாங்களும் பரிதவித்தோம். எங்கள் குடும்பம் நிலை குலைய ஆரம்பித்தது. நடுக்கடலில் சென்றுக் கொண்டிருக்கும் கப்பலில் பிளவு ஏற்பட்டு கப்பலுக்குள் தண்ணீர் புகுந்தால் கப்பலில் உள்ளவர்களின் நிலை எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது எங்கள் நிலை.

அப்பொழுது எனக்கு வயது பனிரெண்டு. அந்தப் பருவத்தில் தாயின் ஆலோசனையும், அரவணைப்பும் மிகவும் இன்றியமையாதது. அதுவரை தாயின் மடியிலேயே படுத்து உறங்கிக் கொண்டிருந்த எனக்கு அப்பொழுது தாயின் அரவணைப்பு கிடைக்காமல் போயிற்று. என் ஒன்றுமறியாத பிஞ்சு உள்ளத்தால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. என் கண்களில் முதன் முதலாகக் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. கவலையறியாதிருந்த என்னைக் கவலை ஆட்கொள்ள ஆரம்பித்தது. வாலிப வயதில் பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு என் தந்தை செய்வதறியாமல் திகைத்தார். உடனே என் சகோதரிகளுக்கெல்லாம் அவசரமாகத் திருமணம் செய்து வைத்தார். நானும், என் அப்பா

வும் தனிமையாக அம்மாவைக் கவனித்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

ஒவ்வொரு நாளும் எங்கள் அம்மா வீட்டை விட்டு ஓடி எங்கேயாவது அடிபட்டு விடுவார்களோ? அவர்களுடைய நிலை என்னவாகுமோ? என்ற கலக்கமும், திகிலும் எங்களை ஆட்கொள்ள ஆரம்பித்தது. அவர்களை நாங்கள் வீட்டில் கட்டி வைத்திருந்தாலும் கூட எப்படியோ ஒருவருக்கும் தெரியாமல் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு எங்கேயாவது போய்விடுவார்கள். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் வீடு கொண்டு வந்து சேர்ப்பதற்குள் என் இருதயமே நின்றுவிடும் போலிருக்கும். என் அப்பா கிறிஸ்துவை அறியாதிருந்தபடியால் அம்மாவை அழைத்துக் கொண்டு எத்தனையோ மந்திரவாதிகளிடம் சென்று ஆயிரக் கணக்காகப் பணம் செலவழித்தும் பயனில்லை. புகழ் பெற்ற வைத்தியர்களிடம் சென்று எவ்வளவோ வைத்தியம் செய்தும், எத்தனையோ கோயில்களுக்குச் சென்றும் என் அம்மாவின் நிலையில் சிறிதும் மாற்றமில்லை. எங்கள் அப்பா வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் விற்று அம்மாவுக்காகச் செலவழித்தார். அதனிமித்தம் அம்மாவுக்குச் சுகம் கிடைக்கவில்லையெனினும் எங்கள் குடும்பத்தை வறுமை ஆட்கொள்ள ஆரம்பித்தது.

இல்லாமை என்றால் என்னவென்றே அறியாதிருந்த எங்கள் குடும்பத்தை இல்லாமை ஆட்கொள்ள ஆரம்பித்தது மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்து வந்த நாங்கள் உண்ண உணவிற்குக் கூட வழியின்றித் தவித்தோம். மற்றவர்களிடமும் எங்கள் கஷ்டத்தைச் சொல்லாமல் தண்ணீர் மட்டும் குடித்து விட்டுப் பட்டினியாயிருந்த நாட்கள் எத்தனையோ உண்டு. எங்கள் நிலையைக் கண்டு உற்றார், உறவினர்கள் எங்களை நிந்தித்தனர். ஆதரிக்க யாருமின்றி நமக்கு ஆதரவாகிய இயேசுவின் ஆறுதலையும் பெற வழி தெரியாமல் கண்ணீர்க் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தோம். நான் கிறிஸ்துவுக்குப் பயந்து வாழ்ந்தாலும் அந்த நாட்களில் அவரைச் சார்ந்து வாழ அறியாமலிருந்தேன்.

அந்த வறுமையின் நாட்களில் நடந்த ஒரு சம்பவம் என் நெஞ்சை விட்டு அகலவேயில்லை. நான் கிறிஸ்தவ ஆலயங்

களுக்கும் ஓய்வுநாள் பள்ளிக்கும் தவறாமல் போய்க் கொண்டிருந்ததால் நான் பாடகர் குழுவிலும் இடம் பெற்றேன். ஒருசமயம் கிறிஸ்துமஸ் ஆராதனையில் பாடுவதற்காக என்னுடன் சேர்ந்த எல்லாப் பிள்ளைகளும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் ஆலயத்திற்குச் சென்றனர். என்னையும் அழைத்தனர். அப்பொழுது எனக்கு நல்ல உடை ஒன்றுகூட இல்லை. ஒரே ஒரு சட்டையும் (Blouse), ஒரே ஒரு புடவையும் இருந்தது. அந்தச் சட்டையிலும் கிழிசல். எல்லோரும் ஆலயத்திற்குப் போய்விட்டார்கள். ஆனால் நானோ கிழிந்த உடையுடன் தனியாக மிகுந்த மன வேதனையுடன் நின்று கொண்டிருந்தேன். ஆலயமணி ஒலிக்க ஆரம்பித்தது. என் கண்களிலும் கண்ணீர் ஊற்றுகள் புறப்பட ஆரம்பித்தது. நான் கண்ணீருடன் நின்று கொண்டிருந்ததைக் கண்டு மன வேதனையடைந்து எங்கள் தூரத்து உறவான ஒரு அம்மா என் கண்ணீரைத் துடைத்து விட்டுத் தம் வீட்டுக்கு என்னை அழைத்துக் கொண்டு போய்த் தன்னிடமிருந்த ஒரு நல்ல புடவையை உடுத்திவிட்டு என்னை ஆலயத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அப்பொழுது அது எனக்கு சொல்லொணா ஆனந்தத்தைத் தந்தது. ஆனால் நான் ஆலயத்திற்குள் நுழையும்போது ஆராதனை முடிந்து எல்லோரும் வெளியே வந்து விட்டனர்.

இப்பொழுது தேவன் என்னை அந்த வறுமையிலிருந்து மீட்டெடுத்து அபரிமிதமாக ஆசீர்வதித்திருக்கிறார். தேவையான வசதிகளையெல்லாம் கொடுத்திருக்கிறார். ஆயினும் இப்பொழுதும் ஒவ்வொரு கிறிஸ்துமஸ் நாளின் போதும் நான் உடுக்க உடையில்லாமல் கண்ணீர் விட்ட அந்த நாளை நினைப்பேன். அதனால் நானும், என் கணவரும் முதலாவதாக எங்களைச் சார்ந்திருக்கும் அனாதைப் பிள்ளைகளுக்கும், அன்பரின் ஊழிய அலுவலகத்தில் பணி புரியும் பெற்றோர், உறவினர்களையிழந்தத் திக்கற்றப் பிள்ளைகளுக்கும், அழகான உடைகள் வாங்கித் தந்து அவர்கள் சந்தோஷப்படுவதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சியடைவோம். ஒரு வசதியுமின்றிக் கஷ்டப்பட்ட எங்களை அநேக அனாதைப் பிள்ளைகளை ஆதரிக்கும்படி உயர்த்தியிருக்கிற இயேசுவுக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஆனால் நான் என் வயதான தந்தையுடனும், பைத்திய

மான தாயுடனும் தனியே நின்ற அந்த இருளின் நாட்களில் என் வாழ்விலும் ஒரு ஒளி தோன்றும் என்ற நம்பிக்கை எனக்குச் சிறிதும் இல்லை. என் அண்ணனும், சகோதரி களும் தங்கள் குடும்பத்துடன் நல்ல நிலையில் இருந்தாலும் அவர்களால் தங்கள் குடும்பத்தைக் கவனிக்கத்தான் இயன் றதே தவிர, அவர்கள் எங்களுக்கு எந்த உதவியும் செய்ய வில்லை. தாவீது சொன்னது போல ''கண்ணீரே எனக்கு உணவாயிற்று.'' *(சங்கீதம் 42:3)*. துக்கமெனும் இருளி லிருந்து என்னை விடுவிப்பார் யார்? வாடிய மலரான என் வாழ்வும் மலருமோ?.

# பாதுகாத்தக் கரங்கள்

சந்தோஷமாய் வாழ வேண்டிய வாலிப வயதில் சஞ்சலத்தினால் நிறைந்து சமாதானமின்றித் தவித்து வந்தேன். அடுத்தடுத்து துன்பங்களே என்னைத் தொடர்ந்தது. என் தந்தையும் என் வாழ்வு எப்படியாகுமோ என்று கலங்கினார். என் வாழ்வு எல்லோருக்கும் ஒரு கேள்விக் குறியானது. மனுஷரால் புறக்கணிக்கப்பட்டேன். ஆறாத்துயரில் நான் ஆழ்ந்திருந்த போதுதான் எப்போதோ யாரோ எனக்குக் கொடுத்திருந்த புதிய ஏற்பாடு என் கண்ணில் பட்டது. தாயைக் காணாமல் அழுது கொண்டிருந்த குழந்தை, தன் தாயைக் கண்டால் எப்படி ஆவலுடன் ஓடி தாயைக் கட்டிப்பிடித்துக் கொள்ளுமோ அதேபோல ஆவலாய் ஓடி அந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகிய வேதத்தை எடுத்து விரித்து அதில் என் முகத்தைப் பதித்து தேம்பி, தேம்பி அழ ஆரம்பித்தேன் நான் எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தேன் என்று எனக்கேத் தெரியவில்லை. மீண்டும் கண்களைத் திறந்து பார்த்தபோது என் கையிலிருந்த வேதம் முழுவதும் கண்ணீரால் நனைந்திருந்தது.

அதுமுதல் நான் எப்பொழுதும் அந்தப் பரிசுத்த வேதத்தை என் கைகளில் ஏந்திக் கொண்டிருக்க ஆரம்பித்தேன். அப்பொழுது எனக்கு வேதத்தை அதிகமாகப் படிக்க வேண்டுமென்ற அறிவு இல்லையெனினும் வேதப் புத்தகத்தை உயிரினும் மேலாய் நேசித்தேன். அதே வாரம் நான் சற்றும் எதிர்பாராத விதமாய், ஒரு ஆஸ்பத்திரியின் தலைமை அதிகாரியான அம்மா என்மேல் இரக்கப்பட்டு எனக்கு நர்ஸ் பயிற்சி சொல்லிக் கொடுத்து வேலையும் தருவதாகவும், அதற்கு வரும்படியும் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அது தேவனே எனக்குச் செய்த நன்மையென்றுதான் சொல்ல வேண்டும். நான் அந்தக் கடிதத்தில் கண்டபடி அதற்கு சென்று நர்ஸ் டிரெய்னிங் முடித்து வேலையிலும் சேர்ந்தேன்.

அங்கும் காரணமற்ற வேதனைகளும், பிரச்சனைகளும் என்னைத் தொடர்ந்து வந்தது. என்மீது பொறாமை கொண்ட சிலர் எனக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய சலுகைகளையும் தாங்கள் எடுத்துக் கொண்டு என்னை மிகவும்

ஒடுக்கினார்கள். தேவனுக்குப் பயந்து நான் உண்மையோடு எவ்வளவு நன்றாக வேலை செய்தாலும் காரணமின்றி என் வேலையில் வேண்டுமென்றே குற்றம் கண்டு பிடித்தனர். எனக்குக் கொடுக்கப்பட்ட வீட்டையும் அவர்கள் ஆக்ரமித்துக் கொண்டு எனக்கென்று ஒரு சிறிய அறையை மட்டும் தந் தார்கள். யார் எனக்குத் தீங்கு செய்தாலும் நான் அவர் களிடம் எதிர்த்துப் பேச மாட்டேன். பதிலாக என் அறைக்குச் சென்று முழங்கால் படியிட்டு தேவனை நோக்கிக் கதறு வேன். தனிமையாயிருந்த அந்த நாட்களில் இயேசுவே எனக்கு அடைக்கலமாயிருந்து என்னைப் பாதுகாத்தார். அவரே எனக்குப் பக்கபலமும், பாதுகாவலுமாயிருந்தார்.

என் முகம் எப்பொழுதும் துக்கம் நிறைந்ததாகவே இருந் ததைக் கண்டு இரக்கப்பட்டு என்னுடன் வேலை செய்த கிறிஸ்துவின் அன்பை அறிந்த சிலர் என்னை ஒரு ஜெபக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். நானும் அவர்களுடன் சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். வேதம் வாசிக்க வேண் டியதின் முக்கியத்துவத்தையும், கர்த்தருடைய வல்லமை யையும் அதிகமாக அறிந்து கொண்டேன். அதுமுதல் வேதத்தை அதிகமாக வாசிக்க ஆரம்பித்தேன். வேதமே எனக்கு ஆறுத லாக அமைந்தது.

ஆனால் நான் தேவனை நெருங்க, உபத்திரவமும் என்னை நெருங்க ஆரம்பித்தது. என் உறவினர்களெல்லாம் நான் கிறிஸ்தவளாக மாறி விட்டேனென்று என்னைத் தூஷிக்க ஆரம்பித்தனர். என்னை விபச்சாரி, நடத்தைக் கெட்டவள், என்றெல்லாம் தூற்றினர். அவற்றைக் கேட்க, கேட்க என்னுள்ளம் மிகுந்த வேதனையில் துடித்தது. அந் நிலையிலும் நான் என்னைக் காண்கிற தேவன் ஒருவர் உண்டு என்று சொல்லி அன்னாள் தன் இருதயத்தை தேவ சமுகத்தில் ஊற்றியது போல நானும் என் வியாகுலங்களை யெல்லாம் தேவசமுகத்தில் ஊற்றினேன். I சாமுவேல் *1:15*

''கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவ னையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும், எளிய வனுக்கும் அவர் இரங்கி எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்'' — சங்கீதம் *72:12,13.*

மேற்கண்ட வேத வசனங்களின்படி உதவியற்ற எனக்கு

இயேசு இரங்கி, என் கண்ணீரைத் துடைத்தார். என் அற்ப ஊதியத்தையும் அவர் நிறைவாய் ஆசீர்வதித்து எனக்கு எந்தப் பற்றாக்குறையும் இல்லாதவாறு காத்தார். நான் என் சொற்ப சம்பளத்திலும் என் பெற்றோருக்கு ஒரு பகுதியைக் கொடுத்து அவர்களை ஆதரித்து வந்தேன். என் வாழ்வில் கிறிஸ்து தந்த சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கண்ட என் உறவினர்கள் தங்கள் தவறை உணர்ந்து என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்டனர். நான் ருசித்த கிறிஸ்துவின் அன்பை அவர்களும் ருசிக்க ஆரம்பித்தனர்.

நான் வேலை செய்யும் இடத்தில் மிகவும் உண்மையாக நடந்தேன். குஷ்டரோகிகளையும் அன்புடன் நேசித்து சற்றும் அருவருக்காமல் அவர்களுக்கு மருந்து கொடுத்து, அவர்கள் தேவைகளைக் கவனிப்பேன். நான் யாரோடும் வீணாக எதையும் பேசாமல் எப்பொழுதும் இயேசுவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பேன். தேவன் எப்பொழுதும் என்னைப் பார்க்கிறார் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றியிருந்ததால் நான் வேலை ஸ்தலத்தின் விதிகள் எல்லாவற்றையும் தவறாமல் கைக் கொண்டு வந்தேன்.

''கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்'' — சங்கீதம் 18:2.

நான் தனிமையாய் இருந்ததைக் கண்டு என் வாழ்வையே சீரழிக்க வேண்டுமென்று அநேகக் கயவர்கள் யோசித்தனர். என் வீட்டிற்கு அருகில் இருந்தவர்களும் என்னைக் காரணமில்லாமல் பொறாமையினிமித்தம் பகைத்தபடியினால் நான் யாருடனும் பேசவும் முடியாதவளாய் உதவிக்குக் கூட ஒருவருமின்றி தனிமையாக என் சின்னஞ்சிறு அறையில் இருந்தபோதும் இயேசுவின் பாதுகாப்பின் கரங்கள் என்னைச் சுற்றிலும் இருந்தது. அவர் என்னைக் கைவிடவேயில்லை. கர்த்தருடைய பலத்த கரம் என்னோடிருந்தால் யாரும் எனக்கு எந்தத் தீங்கும் செய்ய இயலவில்லை.

நான் என் வாலிப வயதில் உலகப் பாவங்களுக்கு என்னைத் தப்புவித்து பரிசுத்தமாய் வாழ்வதற்கு மிகுந்த பாடுகளைப் பட்டபடியால் இப்பொழுது தங்களுடைய

கற்பைப் பாதுகாத்து, கிறிஸ்துவுக்குப் பிரியமாய் வாழப் பாடுபடும் வாலிபப் பிள்ளைகளின் தவிப்பை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. அதனால்தான் முன்பு நான் தவித்ததுபோல் இப்போது ஆதரவின்றித் தவிக்கும் வாலிபப் பிள்ளைகளுக்கு நான் ஆதரவு கொடுத்து, அவர்களுக்கு அன்பரின் ஊழியத்தில் வேலையும் தந்திருக்கிறேன். இதனால் அவர்கள் கற்புடனும், கண்ணியத்துடனும் பரிசுத்தமாக கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ்கிறார்கள்.

நான் ஆஸ்பத்திரியில் வேலை செய்து கொண்டிருந்த போது அவர்கள் கொடுத்திருக்கிற குவார்டர்ஸில் அடுத்த போர்ஷனில் இருந்த அம்மா எனக்குரிய இடத்தையும் ஆக்ரமித்துக் கொண்டார்கள். ஆயினும் நான் அவர்களுடன் வாக்குவாதம் செய்யாமல் எனக்கிருந்த சிறிய அறையிலேயே என்னை ஒடுக்கி வாழ்ந்தேன். அருள்நாதர் என் வேதனைகளைக் கண்டார். மிஷனெரி மார் தங்கியிருந்த ஒரு பெரிய பங்களா அச்சமயம் காலியாக இருந்தது. உயர் அதிகாரிகளெல்லாம் அந்த இடம் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டனர். ஆனால் அதற்குப் பொறுப்பாளராக (in-charge) இருந்தவர்களுடைய மனதில் இயேசு கிறிஸ்து பேசியதால் அவர் அந்த இடத்தை எனக்குத்தான் தருவேனென்றுச் சொல்லி நான் கனவிலும் நினையாத நேரத்தில் அந்தப் பெரிய பங்களாவின் ஒரு பகுதியை எனக்குத் தங்குவதற்குக் கொடுத்தார். அங்கு எனக்கு எல்லா வசதிகளும் இருந்தது. என் உயர் அதிகாரிகளும், சிறுமைப்பட்டவளாகிய என்னைப் பொறாமையினிமித்தம் துன்பப்படுத்தினவர்களும் அதைக் கண்டு பிரமித்தனர். தேவன் என்னை அவர்களுடைய கைகளுக்கெல்லாம் தப்புவித்தார்.

> ''நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என்
> சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்;
> தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை
> அறிவேன் தேவனை நம்பியிருக்கிறேன். நான் பயப்
> படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?''

— *சங்கீதம் 56:9,11.*

# அழுகையின் பள்ளத்தாக்கு

''யார் என்னைக் கைவிட்டாலும், நீர் என்னைக் கைவிட மாட்டீர் இயேசுவே
நீர் என்னைக் கைவிடமாட்டீர்
(உலகம்) கண்டால் ஒன்று சொல்லும். எனைக் காணா தொன்று சொல்லும்
நான் வாழ்ந்தால் அது போற்றும்; நிலை தாழ்ந்தால் அது தூற்றும்
உள்ளம் ஒன்று பேசும். இரு உதடும் ஒன்றுபேசும்
அங்கு உண்மையில்லை, நன்மையில்லை
எல்லாம் வெளிவேஷம். ஆனால் நீரோ என் தெய்வமே
என்னோடு என்றென்றும் வாழ்கிறீர்.''

மேலேயுள்ள இந்தப் பாடலின் அடிகளின்படி உலகமே என்னை ஒதுக்கி நிந்தித்தாலும் இயேசு எனக்குத் தஞ்சமாயிருந்தார். பெற்றோரின் உதவியின்றித் தனிமரமாய் இருந்த என்னை என் உறவினர்களும் பாரமாக நினைத்தனர். நான் இருப்பதைவிட இறந்து விட்டால் நன்றாயிருக்கும் என்று அனைவரும் நினைக்கும் நிலைக்கு வந்தேன். ஆனால் நானோ நடக்கும்போதும், நிற்கும்போதும், உட்காரும் போதும், படுக்கும் போதும், வேலை செய்யும்போதும் இயேசுவையே சிந்தித்துக் கொண்டிருந்தேன். உலகமே தெரியாமல் இயேசுவையே உலகமாகக் கொண்டு வாழ்ந்தேன். நான் என் எதிர்காலம் என்னவாகுமென்ற எண்ணம் கூட இல்லாமல் இருந்தேன்.

வாலிப வயதில் திக்கற்றவளாய் நின்ற எனக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டுமென்ற எண்ணமும் ஒருவருக்கும் வரவில்லை. ஆயினும் இயேசுகிறிஸ்து எனக்கு இரங்கி, எனக்கு ஒரு வாழ்க்கை அமைத்துத்தர சித்தம் கொண்டார். எங்களுக்கு மருத்துவ அதிகாரியாக (Medical S u perintendent) இருந்த டாக்டர். திருமதி. ஸ்டீபன் அவர்கள் எனக்குத் தெரியாமலே என்னைக் கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று ஒருநாள் என்னை அழைத்து ''மகளே, நீ இப்படித் தனிமையாக திக்கற்றவளாய் இருப்பது நல்லதல்ல. எனக்கும் உன்னைப்போல் ஒரு மகள் இருக்கிறாள். அவள் இப்பொழுது நீ இருக்கும் நிலையில் இருந்

நல்ல வாழ்க்கை அமைத்துத்தர முயற்சிப்பேனல்லவா? அதே போல உன்னையும் என் மகளாக எண்ணி நான் சொல்கிறேன். நீ திருமணம் செய்து செய்து கொள். நான் உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்துத் தருகிறேன்'' என்றுச் சொன்னார்கள். ஆனால் நான் எனக்குத் திருமணமே வேண்டாம் என்றுச் சொல்லிவிட்டேன். ஆயினும் அவர்கள் அடிக்கடி என்னை அழைத்து ''நீ திருமணம் செய்து கொள் ளாமல் தனிமையில் இப்படி இருந்தால் யாராவது உனக்குத் தீங்கு செய்து உன் வாழ்வையே கெடுத்து விடுவார்கள். ஆகவே நீ திருமணம் செய்துகொள்'' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள்.

அப்பொழுதுதான் சகோ. ஆனந்த ஸ்திரா அவர்களும் இயேசுவின் சித்தத்தின்படி என்னைத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தார்கள். உடனே டாக்டர். திருமதி. ஸ்டீபன் அவர்கள் என் அப்பாவையும், அண்ணனையும் அழைத்துப் பேசினார்கள். ஆயினும் அவர்கள் சகோதரன் கிறிஸ்தவரென்பதாலும் அவரை முன்பின் தெரியாதென்ப தாலும் என்னை அவருக்குத் திருமணம் செய்து கொடுக்க முடியாதென்றும் சொல்லிவிட்டார்கள். அதன்பின் ஒரு வருடம் கழிந்தது. நான் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தேவனுடைய சித்தம் மட்டும் என் வாழ்வில் நிறைவேற வேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்துக்கொண்டிருந்தேன். என் சிந்தனைகளும், செயல்களும் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்தமாயிருந்தது. ஒருநாள் நான் என் அறையில் தனியே இயேசுவை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தபோது அவர் எனக்கு ஒரு தரிசனத்தைக் காட்டினார். அதில் நான் ஒரு பக்கமும், சகோதரன் மறுபக்கமும் இடையில் இயேசுகிறிஸ் துவும் இருந்ததைக் கண்டேன். மேலும்.

''முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது'' - பிரசங்கி 4:12 என்ற சத்தத்தையும் கேட்டேன். உடனே நான் ''இயேசுவே, நீரே என் வாழ்வின் மையமாயிருந்தது உம்முடைய சித்தத் தின்படி என்னை நடத்தும்'' என்றுச் சொல்லி என் வாழ்வை இயேசுவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தேன். அதன்பிறகு திடீரென்று இயேசுகிறிஸ்து ஒருநாள் என் அப்பாவுடன் பேசி அவரே முன்வந்து எனக்குத் திருமணத்தை நடத்தி

நின்று நடத்தி வைத்த டாக்டர். திருமதி. ஸ்டீபன் அவர் களை நான் மறக்கவேயில்லை. அடிக்கடி அவர்களை நினைத்து நன்றியுடன் தேவனைத் துதிக்கிறேன்.

திருமணத்திற்குப் பிறகு நான் என் கணவர் மிகுந்த தேவபக்தியும், பாசமும் உள்ளவராய் இருப்பார் என்று எண்ணினேன். ஆனால் திருமணமானதும் நான் பெரிய ஏமாற்றத்தையே சந்திக்க வேண்டியிருந்தது. என் கணவரை வளர்த்த இடத்தில் சிறு வயதிலேயே அவருக்கு இயேசு வைப் பற்றிச் சொல்லிக் கொடுத்திருந்தும் அவர் கிறிஸ்த வர்களால் அடைந்த கொடுமையினிமித்தமும், தாய், தகப் பன் இல்லையே என்ற ஏக்கத்தினிமித்தமும் கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வந்திருந்தார். அன்பான கடவுள் எங்கே? தாய் எங்கே? என்ற கேள்விகள் அவருடைய மனதைப் புண் ணாக்கியிருந்தது. அதனால் அவர் குடும்பத்தின் மீது பற்றும், பாசமும் இல்லாதவராய் இருந்தார். நான் உண்மை மனைவி என்ற முறையில் எவ்வளவுதான் அன்பு செலுத்தி னாலும் அவருக்கு அந்த அன்பு ஒரு பொருட்டாகத் தெரிய வில்லை. தன் தாயின் அன்பும், தான் தேடிக்கொண்டிருந்த கடவுளின் அன்பும்தான் பெரியதென்று எண்ணி என்னை விட்டு எங்கேயாவது போய்விடவேண்டுமென்று முயற்சித் தார். நடுநிசி நேரத்திலும் வீட்டை விட்டுப் போய் ஆற்றங் கரை மற்றுமான தனிமையான இடங்களில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டேயிருப்பார்.

நான் பகல் முழுவதும் ஆஸ்பத்திரியில் வேலை செய்து விட்டு வந்தக் களைப்பில் இரவில் அயர்ந்து தூங்கிக் கொண் டிருக்கும் போது திடீரென்று தன் சான்றிதழ்கள், உடைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு இரவு 2 மணியளவில் வீட்டை விட்டுப் போய்விடுவார். திடீரென்று நான் விழித் துப் பார்த்தால் அவரைக் காணாமல் இருக்கும். இப்படிப் பலமுறைகள் அவரைக் காணாமல் திகிலுடன் எழும்பியிருக் கிறேன். சில சமயங்களில் அவர் கதவைத் திறக்கும்போதே பார்த்து கெஞ்சி வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு வரு வேன். சில சமயங்களில் வீட்டை விட்டு இறங்கித் தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது பார்த்து கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். சிற்சிலசமயங்களில் அந்த நடுநிசி நேரத்

தில் அவரைத் தேடிக்கொண்டுத் தனியாக வீட்டிற்கு அருகில் இருக்கும் பஸ் ஸ்டாப்க்குப் போய் கெஞ்சி, பிடிவாதமாய் வீட்டிற்கு அழைத்து வந்ததும் உண்டு. இதனால் என்னால் நிம்மதியாகத் தூங்கக்கூட முடியாது.

தன் மனச்சோர்வினிமித்தம் என் கணவர் நான் எவ்வளவுதான் அன்பு செலுத்தினாலும் அந்த அன்பைப் புரிந்து கொள்ளாமல் என்னை அடிப்பார். சாப்பிடாமல் படுத்துக் கொள்வார். என்னை ஒதுக்கித் தள்ளுவார். அப்பொழுதெல்லாம் அடிகளையும் வாங்கிக் கொண்டு இரவு முழுவதும் இயேசுவை நோக்கிக் கண்ணீர் வடிப்பேன். நான் கஷ்டப்படும்போது என் தாயையோ, தந்தையையோ, சகோதரனையோ, சகோதரிகளையோ நினைக்கமாட்டேன். இயேசுவையே நினைத்து அவருடைய பாதங்களையே அண்டிக் கொள்வேன். நான் அழும் நேரமெல்லாம் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராய் எனக்கு முன் காட்சியளிப்பார்.

நான் அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு ''இயேசுவே, உம்சித்தப்படிதானே எனக்குத் திருமணம் நடைபெற்றது. நீர் எனக்குத் தரிசனம் காட்டினீரே. ஆனாலும் நான் இப்படி சொல்லொணாக் கஷ்டங்கள் அனுபவிக்கிறேன்'' என்று இரவெல்லாம் தூங்காமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பேன். இயேசு என்னிடம் ''மகளே, உன் கணவன் உன் கையில் கொடுக்கப்பட்டிருக்கிற பாத்திரம். நீ என் நாமத்தினால் அந்தப் பாத்திரத்தைப் பரிசுத்தமாக்கு நான் பானம் பண்ணும் பாத்திரமாக மாற்ற வேண்டும். நீ உன் கணவன் அடித்தாலும் அவரை வெறுக்காமல் என்னுடைய அன்பை அவருக்குக் காட்டி. நீ செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய். நான் உன் ஜெபத்தைக் கேட்டு, உன் கணவனைக் கட்டாயம் மாற்றுவேன்'' என்றுச் சொன்னார்.

என் பெற்றோர் என்னைச் சிறு வயதிலிருந்து மிகவும் செல்லமாக வளர்த்தபடியால் எனக்கு நன்கு சமைக்கக்கூடத் தெரியாதிருந்தது. என் தாய் பைத்தியமாயிருந்ததால் ஒரு தாய் திருமணத்தின்போது தன் மகளுக்குச் சொல்லித்தரும் ஆலோசனைகளை எனக்குச் சொல்லித்தர முடியவில்லை

திருமணமான புதிதில் என் கணவர் எனக்கு சமையலில் உதவி செய்தார். ஆகவே நான் சமைக்கும் முன்பு முழங்கால் படியிட்டு "இயேசுவே, எனக்கு சமைக்க தெரியாது. என் கணவருக்கு பிரியமான வகையில் சமைக்க எனக்கு சொல்லித்தாரும்" என்று ஜெபித்து சமைப்பேன். அவர் [illegible] தந்து நான் என் கணவருக்கு பிரியமான வகையில் ருசியுள்ள ஆகாரங் களைச் சமைக்கத் தேவையான ஞானத்தைத் தந்தார். கிறிஸ்துவின் அன்பு என்னை நிரப்பியிருந்ததால் நான் என் கணவரை எந்த நிலையிலும் நேசிக்கக் கற்றுக் கொண்டேன். அவர் கோபத்தினால் என்னை அடித்துவிட்டுப் படுத்திருந்தாலும் நானே தாழ்ந்து போய் அவரை எழுப்பிக் கொண்டு வந்து சாப்பாடு கொடுப்பேன்.

ஆனாலும் என் கணவருக்குத் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்தது. ஒரு நாள் நான் சமைத்து முடித்துவிட்டு என் கணவருக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தேன். அப்போது என் சின்னக்குழந்தை பசியால் அழுதபடியால் அவளுக்குப் பால் கலக்கிக் கொடுப்பதற்காகச் சென்றுவிட்டேன். அந்த நேரத்தில் என் கணவர் எலியைக் கொள்ளுகிற விஷமருந்தை எடுத்துச் சாப்பாட்டில் கொட்டி கலந்து விட்டார். உடனே மருந்து நெடி அந்த இடத்தில் அதிகமாக வீச ஆரம்பித்தது. அதை முகர்ந்து அங்கே ஓடிவந்த நான் என் கணவர் ஒருவேளை அதைச் சாப்பிட்டிருப்பாரோ என்ற திகிலில் என்ன செய்கிறேனென்பதையே அறியாமல் விஷ மருந்து கலந்த சாப்பாட்டை எடுத்து வாயில் வைத்து விட்டேன். சற்று நேரத்தில் பயங்கரமான வாந்தியும், மயக்கமும் வந்து நான் சுயநினைவையிழக்க ஆரம்பித்தேன். மரணம் என்னை வாவென்று அழைத்தது. அந்த நடுநிசி நேரத்தில் எந்த மருத்துவரிடமும் செல்ல முடியாது. என் நிலையைக் கண்டு என் கணவரும் பயந்து கண்ணீர் வடித்தார். தன்னால் இயன்ற முதலுதவிகளைச் செய்தார். ஆயினும் பயனில்லை. மரணவாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த நான் என் கணவரை அழைத்து ''நான் இறக்கப் போகிறேன். நம் இரண்டு பெண்குழந்தைகளையும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்றுச் சொன்னேன்.

உடனே ஆவியானவர் என்னை முழங்காற் படியிட்டு

ஜெபிக்கும்படித் தூண்டினார். நானும் முழங்காற்படியிட்டு கண்ணீரோடு இயேசுவை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். உடனே வானம் இரண்டாகத் திறக்கப்பட்டு வானத்தி லிருந்து மின்னல் போன்ற பிரகாசமான ஒளி என்மேல் பட்டது. அந்த வினாடியே பூரணசுகம் பெற்றேன். அடுத்த நாள் காலையிலே வழக்கம்போல வேலைக்குச் சென்று விட்டேன்.

பலசமயங்களில் நான் வீட்டிற்குள் ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அவர் எனக்குத் தெரியாமல் மண் ணெண்ணெயைத் தன்மேல் ஊற்றி நெருப்பு வைத்துக் கொள்வார். நான் ஏதோ ஒரு உந்துதலின் பேரில் அவரை வந்துப் பார்த்தால் அவர் நெருப்பு பற்ற வைத்துக் கொண்டி ருப்பார். திருமணத்திற்குப்பின் அவர் கிட்டத்தட்ட இருநூறு முறைகளுக்கும் அதிகமாக தற்கொலை செய்து தன் வாழ்வை முடித்துக்கொள்ள முயற்சித்திருக்கிறார். இதனால் ஏற் கனவே பலவிதமான துன்பத்திற்குள்ளாகி பெருங்காற்றில் அகப்பட்ட சின்னஞ்சிறு படகாகிய என் வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் போயிற்று. என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று என் கண்கள் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிந்தது. *(யோபு 16:20).*

> ''இதோ, நான் முன்னாகப் போனாலும் அவர் இல்லை, பின்னாகப் போனாலும் அவரை காணேன்; இடது புறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலது புறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்.''
>
> - யோபு **23:8, 9.**

நான் சாப்பிடும் ஒவ்வொரு வேளை உணவிலும் என் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் கலந்து விடும். நான் என் பிள்ளைகளுக்காய் பரிதபிப்பேன். என் கணவருக்காய் அங்கலாய்ப்பேன். நான் இரவும், பகலும் நிம்மதியற்றவளா கவே காணப்பட்டேன். நான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அதை யாரிடமும் சொல்லமாட்டேன். என் பெற்றோருக் கும், சகோதர, சகோதரிகளுக்கும் கூட நான் பட்டப் பாடு கள் தெரியாது. ஆயினும் பரிசுத்த ஆவியானவர் நிமிஷந் தோறும் என்னை வழிநடத்தினார். அவர் என்னை அவ்வப்

போது ஆறுதல்படுத்தி நடத்தினார். என் கணவர் ஆங்கில விஞ்ஞான படங்களையும், யுத்தங்களைப் பற்றிய படங்களையும் மிகவும் விரும்பிப் பார்ப்பார். நான் பார்க்க வேண்டாமென்றுச் சொன்னாலும் கேட்க மாட்டார். ஆகவே நான் கண்ணீரோடு இயேசுவை நோக்கி ஜெபிப்பேன். அருள்நாதர் இயேசு அதைக்கேட்டு அவர் சினிமாவுக்குப் போக முடியாத சூழ்நிலையை உருவாக்கி விடுவார். நான் சொன்னபடியே சினிமாவுக்குப் போகமுடியாமல் போய் விட்டதை நினைத்து என் கணவருக்கு என் மீது பயங்கர கோபம் ஏற்படும். அந்த நாட்களில் நான் பட்ட பாடுகளுக்கும், வடித்த கண்ணீருக்கும் அளவேயில்லை. ஆயினும் நான் கடந்து வந்த அழுகையின் பள்ளத்தாக்கிலும் இயேசு என்னோடு கூட வந்தார்.

''உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை
அவர் அற்பமாயெண்ணாமலும், அருவருக்காமலும்,
தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து,
தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக்
கேட்டருளினார்:- சங்கீதம் 22:24.

''தேவனே, நொறுங்குண்டதும், நடுங்குண்டதுமான
இருதயத்தை நீர் புறக்கணியீர்'' - சங்கீதம் 51:17.

''என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்;
அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?'' - சங்கீதம் 56:8.

''அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை
நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்'' - சங்கீதம் 84:6.

மேற்கண்ட வேதவசனங்களின்படி இயேசுகிறிஸ்து என் விண்ணப்பங்களுக்கு இரங்கி, பதில் கொடுத்து, என் கண்ணீரைக் களிப்பாக மாற்றினார்.

A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006.
Tamil Nadu

# அரவணைத்தக் கரங்கள்

''மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப் படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பய பக்தியோடு கூடிய அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடவடிக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள்'' - I பேதுரு 3:5.

என் கணவர் ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் வளர்க்கப் பட்டாலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களா லேயே அநேகக் கஷ்டங்கள் பட்டதால் அவர் கிறிஸ்துவின் அன்பை நாடவில்லை. இயேசுகிறிஸ்துவைப் பற்றி அவரி டம் சொன்னால் வீட்டில் சண்டைதான் நடக்கும். நான் சொல் வதை அவர் சற்றும் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஒரு சமயம் ஒரு ஊழியக்காரர் என் கணவரைக் காரணமின்றிக் குற்றப் படுத்தி கர்த்தருடைய வார்த்தையென்றுச் சொல்லித் திட்டி விட்டார். உடனே என்கணவருக்கு தான் கிறிஸ்தவர்களால் பட்ட கஷ்டங்களெல்லாம் நினைவுக்கு வந்தது. அதனால் மிகுந்த மனச் சோர்வடைந்து மண்ணெண்ணையை எடுத்து தன் ஆடையில் ஊற்றி நெருப்பு பற்ற வைத்து விட்டார். நெருப்பு வேகமாகப் பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. அவரை அதிலிருந்து காப்பாற்றுவது பெரிய பாடாய் போய் விட்டது. ஆதிலும் அவர் அன்றிலிருந்து என்னை எந்த ஜெபக்கூட்டங்களுக்கும் போகவிடமாட்டார்.

தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியம் எனக்கிலாவிட் டாலும் இயேசுவே எனக்குப் போதித்து நடத்தினார். நான் எனக்குக் கொஞ்சம் நேரம் கிடைத்தாலும் உடனே வேதத்தை எடுத்து ஆவலாக வாசிப்பேன். வேதமே எனக்கு உறு துணையாய் இருந்தது.

''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது''
-சங்கீதம் 119:105.

''நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய
வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என்

கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்''.
- சங்கீதம் 32:8.

நான் என் திருமண வாழ்வின் ஆரம்பத்தில் பட்டக் கஷ்டங்கள் அளவிலடங்காது. நான் என் சுய விருப்பத்தின் படி நடந்திருந்தேனானால் நான் என் கணவரை விட்டு விட்டு உறவினர்களிடம் போயிருப்பேன்.

''நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற படியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது''
- ரோமர் 5:5.

''அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் விசுவாசிக்கும். சகலத்தையும் நம்பும். சகலத்தையும் சகிக்கும்''
— I கொரிந்தியர் 13:7.

மேற்கண்ட திருமறை வசனங்களின்படி ஆவியானவர் கொடுத்த அன்பு எனக்குள் இருந்ததால் என் கணவரை நான் எந்நிலையிலும் நேசித்தேன். அவர் என்னை அடித்தாலும், திட்டினாலும், காரணமில்லாமல் என்மேல் கோபப்பட்டாலும் நான் பொறுமையுடன் எல்லாவற்றையும் சகித்தேன். அவர் திடீரென்று இரவு 12 மணிக்கு தனக்குத் தெரிந்தவர்களை அழைத்துக் கொண்டு வந்து சப்பாடு கொடு என்பார். உடனே சமைத்து அந்த அர்த்த ராத்திரியில் அவர்களுக்குக் கொடுப்பேன். சில சமயங்களில் எல்லாவற்றையும் அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு நான் பட்டினியாக இருப்பேன். இப்படியாக நான் என்னையே தியாகம் செய்து, தாழ்மையுடன் கிறிஸ்துவின் அன்பைக் காண்பிப்பேன். நான் யாரிடமும் அநாவசியமாகப் பேசமாட்டேன். கிறிஸ்துவின் அன்புக்கு என்னால் இழுக்கு வரக்கூடாது என்று நினைத்து ஜெபத்துடன் கவனமாக நடப்பேன். இரவில் அவர் வர 12 மணியானாலும் அவருக்காகச் சாப்பிடாமல் காத்திருப்பேன்.

அவர் கள்ளம், கபடம், சூது அற்றவராய் இருந்தபோதிலும் அவர் அறியாமல் எதுவும் செய்ய மாட்டேன். அவர் சொல்லும் காரியங்களுக்கு உடனே கீழ்ப்படிவேன். அவருக்கு வேண்டியவைகளையெல்லாம் அவர் சொல்லா

மலே முதலாவது வாங்கி விடுவேன். அவர் ஆஸ்துமாவி னால் கஷ்டப்பட்ட நேரங்களிலெல்லாம் இரவுமுழுவதும் ஒரு வினாடி கூட கண்ணை மூடாமல் அவருடைய அருகி லேயே இருந்து கண்ணீருடன் அவருக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்து கொண்டிருப்பேன்.

என் கண்கள் என் கணவர் மனம் திரும்ப வேண்டு மென்று இயேசுவை நோக்கிக் கண்ணீர் வடித்துக் கொண் டேயிருக்கும். இயேசு என் ஜெபத்திற்கு நிச்சயம் பதில் தருவார் என்ற நம்பிக்கை என்னுள் அசையாமல் வேரூன்றியிருந்தது. ஆனால் நான் எப்போதும் அமைதியாக இருந்த தினிமித்தம் என் கணவர் ''எப்போதுமே உன் முகத்தில் சோகம்தானா? உன் முகத்தில் சந்தோஷமே யிருக்காதா? மற்றப் பெண்களைப்போல் ஜாலியாக இருக் கவே உனக்குத் தெரியாதா?'' என்று அநேகமுறைகள் கேட் டிருக்கிறார். ஆயினும் நாளடைவில் என் நடக்கைகள் அவருடைய உள்ளத்தை அதிகமாகத் தொட்டது. மற்ற வர்களுக்கும், எனக்கும் உள்ள வித்தியாசத்தை அவர் உணர ஆரம்பித்தார். ஒருநாள் என் கையைப் பிடித்துக் கொண்டு ''நீ மற்றவர்களை விட வித்தியாசமாக இருக்கக் காரண மென்ன? உன்னைப் பார்க்கும்போதே ஒரு பரிசுத்தம் தெரி கிறதே. நானும் உன்னைப்போல் இருக்கமுடியுமா? உனக் குள் ஒரு அசையாத நம்பிக்கை காணப்படுகிறதே. எனக்கு வாழ்வில் அப்படிப்பட்ட நம்பிக்கை இல்லையே'' என்றுச் சொல்லி கண்ணீர் வடித்தார். நான் என் நம்பிக்கைக்கும், பரிசுத்தத்திற்கும் காரணம் இயேசுவே என்றுச் சொல்லி, இயேசு அனைவருக்கும் அந்த நம்பிக்கையையும், பரிசுத் தத்தையும் தரவல்லவர் என்பதை உறுதியாகக் கூறினேன்.

அது முதல் இயேசு என் கணவரைச் சந்திக்க வேண்டு மென்று ஊக்கமாக ஜெபித்துக்கொண்டிருந்தேன். அச்சம யத்தில் ஒருமுறை எனக்குத் தெரியாமல் என் கணவர் எங் கள் படுக்கை அறையில் தூக்குக் கயிறை மாட்டிவிட்டு, இரண்டுமில்லிகிராம் பொட்டாசியம் சயனைடை எடுத்து வைத்து அதை உட்கொண்டுவிட்டு தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்ய முடிவெடுத்து அதற்குமுன் தரையில் தலையை மோதி, மோதி ''தாய் எங்கே?, அன் புள்ள கடவுள் எங்கே?'' என்று கதறிக்கொண்டிருந்திருக்

கிறார். அதேசமயத்தில் நான் என் வேலையின் மத்தியிலும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி என் கணவருக்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் கணவர் இருந்த அறையில் மூடியிருந்த கதவுகளையும் தாண்டி இயேசுகிறிஸ்து வந்து என் கணவரை அணைத்துக் கொண்டு ''மகனே, நீ புறக்கணித்த இயேசு நானே. நானே உனக்குத் தாய். நானே உனக்குத் தகப்பன். உனக்காக உயிரையே கொடுத்தவர்'' நான் உன்னுடன் கூடவே இருந்து உன்னை ஆசீர்வதித்து நடத்துவேன்'' என்றுச் சொல்லி ஆறுதல் படுத்தினார். இயேசுவுக்குள் என் கணவர் உண்மை அன்பைக் கண்டு கொண்டார்.

அதன்பிறகு மீண்டும் ஒரு முறை இயேசுதரிசனமாகி என் கணவரைப் பரித்த ஆவியால் நிரப்பினார். இயேசு என்கணவருடைய வாழ்வில் இடைப்பட்டவுடன் எங்கள் வாழ்விலிருந்த கசப்புமாறியது. என் கணவர் முன்பு என்னை எவ்வளவு அதிகமாய் வெறுத்தாரோ, அவ்வளவு அதிகமாய் நேசிக்க ஆரம்பித்தார். அந்தப் பாசத்தில் நான் என் தாய், தந்தையில்லாத குறையை மறந்தேன். அவர் என்னை அதிகமாய் நம்பி எல்லாவற்றையும் என் பொறுப்பில் விட்டார். பிள்ளைகளும் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர். எங்கள் கடைசி மகள் ஜேன் தன் 7-ம் வயதிலேயே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றாள். எங்கள் குடும்பமே பரலோகம்போல் மாறிவிட்டது.

என் கணவர் பிறந்ததிலிருந்து கொடிய ஆஸ்துமா வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார். எவ்வளவோ விலையுயர்ந்த மருந்துகளும் அவரைக் குணமாக்கமுடியவில்லை. இவ்வாறாக இக்கொடிய வியாதியினிமித்தம் தன் 29-ம் வயதுவரை அவர் சொல்லொணா வேதனைகளை அடைந்தார். திருமணத்திற்குப்பின்பு அவர் ஆஸ்துமாவினால் மூச்சுகூட விட முடியாமல் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது நானும் கண்ணீருடன் இயேசுவை நோக்கி யாக்கோபு போல் என் கணவருடைய உயிருக்காகப் போராடி ஜெபித்தேன். இயேசு எங்கள் வேதனைகளைக் கண்டு மனதுருகி 29 வருடங்களாக அவருக்கிருந்த கொடிய ஆஸ்துமா வியாதியை அற்புதமாகக் குணமாக்கி எங்கள் கண்ணீரைத் துடைத்தார்.

என் கணவர் கபடமறியாதவர். யார் வந்து எதைக் கேட்டாலும் இரக்கப்பட்டு அவர்களுக்கு அதைச் செய்யும் தாராள குணமுடையவராய் இருந்தார். இதனிமித்தம் அநேகர் அவரை ஏமாற்றிவிட்டனர். அவர் இரவு, பகல் பாராது கொஞ்சமும் ஓய்வெடுக்காமல் வேலைசெய்தும் பலனிருக்காது. வேலைக்கேற்ற ஊதியத்தையும் தரமாட்டார்கள். என் கணவருக்கு நல்ல திறமையும், ஞானமும் இருந்தது. ஆகவே தனியாய் சொந்தமாக இரத்தப் பரிசோதனை நிலையம் (Clinical Laboratory) ஆரம்பிக்க வேண்டுமென்று நான் விடாப்பிடியாய் தேவனிடத்தில் போராடி ஜெபித்தேன். நான் என் கணவரிடம் "தேவன், நமக்கு சொந்தமாக ஒரு இரத்தப் பரிசோதனை நிலையத்தைத் தருவார்" என்றுச் சொன்னால் அவர் சிரிப்பார். "குறைந்தது ரூ. 50,000 இல்லாமல் நாம் இரத்தப் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கவே முடியாது. நமக்கு யார் அவ்வளவு அதிகத் தொகையைக் கொடுப்பார்கள்?" என்றுச் சொல்லிவிடுவார். ஆனால் நான் அசையாத நம்பிக்கையுடன் அனாதையென்ற காரணத்திற்காக எல்லோராலும் அற்பமாய் எண்ணப்பட்ட என் கணவர் அனைவருக்கும் ஆசீர்வாதமாக, அனைவருக்கும் முன்பாக இயேசுவின் கிருபையால் சொந்தத் தொழில் செய்யும் எஜமானாக, இயேசுவின் வரங்களாலும், வல்லமைகளாலும் நிறைக்கப்பட்டு இயேசுவைப் பிரதிபலிக்கும் ஊழியராக மாறவேண்டுமென்று உபவாசத்துடன் அந்தரங்கத்தில் போராடி ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

> "அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்"
> - மத்தேயு 6:18.

என்ற வாக்கின்படி தேவன் என் ஜெபத்தைக்கேட்டு இறுதியில் வெளியரங்கமாய்ப் பலனளித்தார். எங்களுக்கு அறிமுகமில்லாத ஒருவரின் இருதயத்தில் பேசி அவர் ஒரு குறிப்பிட்டத் தொகையைத் தரவும், அதன் மூலம் இரத்தப் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கவும் இயேசு அனுக்ரகம் செய்தார். இது அனைவருக்கும் மிகுந்த ஆச்சரியம் தந்தது.

> "அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்" - சங்கீதம் 126:2.

இயேசுகிறிஸ்து அந்தத் தொழிலிலும் எங்களை மென் மேலும் ஆசீர்வதித்தார். நாங்கள் ஒவ்வொரு நாளும் எங் களுக்கு வரும் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தேவ னுக்கென்று மனமுவந்து எடுத்து வைக்க ஆரம்பித்தோம். நாங்கள் உற்சாகமாய் தேவனுக்கென்று கொடுக்கக் கொடுக்க எங்கள் தொழிலிலும் ஆசீர்வாதம் பெருகிக் கொண்டே யிருந்தது. இயேசுவின் கிருபையால் எங்களுக்கு ஒரு குறை வும் இல்லை. எங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் தேவன் எங்கள் இரத்தப் பரிசோதனை நிலையத்தின் மூலம் எங்களுக்காக அருளிச்செய்கிறார்.

மனுஷரால் புறக்கணிக்கப்பட்ட நாங்கள் மனிதர்களை நம்புவதை விட்டு விட்டு தேவனைப் பற்றிப் பிடித்து வாழ ஆரம்பித்தோம். என் கணவர் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு இரவில் நேரம் கழித்து வீட்டிற்கு வந்தாலும் இயேசுவின் மேல் உள்ள வாஞ்சையால் ஓய்வுகூட எடுக்கா மல் இரவு முழுவதும் அநேக மணி நேரங்கள் ஜெபித்துக் கொண்டிருப்பார். மீண்டும் இயேசுகிறிஸ்து அவருக்குத் தரி சனமாகி தம் வரங்களினாலும், வல்லமைகளினாலும் நிரப்பி தம் நாம மகிமைக்கென்றுப் பயன்படுத்தி வருகிறார். நாங் கள் செய்து வரும் அன்பரின் ஊழியத்தில் (Ministry of Jesus) நாளுக்கு நாள் அதிக முன்னேற்றத்தைக் காண இயேசு கிரு பைச் செய்து வருகிறார்.

அன்பரின் ஊழிய அலுவலகத்தைக் கவனித்து, நடத்தத் தக்கதாக தேவன் தம்முடைய கிருபைகளையும், ஞானத்தை யும் எனக்குத் தந்து பயன்படுத்தி வருகிறார். என் கணவர் தொழில்திறமை மிக்கவராய் இருந்ததால் அவர் ஒரு மருத்து வராகப் படிக்கவேண்டுமென்று நான் விரும்பினேன். அப் பொழுது அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையெனினும் நாங்கள் தேவனுடைய ஊழியத்தை உண்மையாகச் செய்ய ஆரம்பித்தவுடன் தேவன் என் கணவர் ஒரு மருத்துவ ராகத் (Doctor) திகழும்படிச் செய்திருக்கிறார்.

''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். மற்றவைகளெல்லாம் உங்க ளுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' - மத்தேயு 6:33.

ஆம். முதலாவது நாங்கள் தேவனுடைய ராஜ்யத்தைத்

தேட ஆரம்பித்தவுடன் தேவன் எங்களுக்கு உலகப்பிரகார மான ஆசீர்வாதங்களையெல்லாம் கூட்டிக் கொடுத்திருக் கிறார்.

> "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்"
> - அப்போஸ்தலர் 16:31.

நாங்கள் குடும்பமாக இயேசுவின் அன்பை ருசிக்க ஆரம் பித்தவுடன் என் சகோதரரின் குடும்பத்தினரும், சகோதரி களின் குடும்பத்தினரும் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள வேண்டுமென்று மிகுந்த பாரத்துடன் ஜெபிக்க ஆரம்பித்தோம். இயேசுகிறிஸ்து அதைக் கேட்டு அவர் களைத் தொட்டார். என் அண்ணன் குடி, சிகரெட் மற்றும் கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையாகியிருந்தார். ஒரு அக் காவின் கணவர் நாஸ்திகராய் கடவுள் இல்லையென்றுச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்களிருவரும் எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் குடும்ப வாழ்வில் இயேசுவால் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களைக் கண்டு இயேசுவின் அன்பை உணர்ந்து கொண்டனர். தங்கள் பாவப் பழக்கங்களிலிருந்து விடுதலை பெற்றனர். மற்றொரு சகோதரியின் கணவர் பாரம்பரியத்தின்படி அநேக வழிபாடுகளில் இருந்தார். அவர்கள் இருந்த இடத்தில் திருவிழாவென்றால் அவர்தான் முதலாவதாக நிற்பார். அவரையும் இயேசு சந்தித்தார். அவர் இயேசுவே மெய்யான தெய்வம் என்பதை அறிந்து கொண்டார். கிறிஸ்தவர்களேயில்லாதிருந்த அந்த இடத்தில் இப்பொழுது ஒரு கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டு விட்டது. இவ்விதமாக இயேசு என் குடும்பத்தினரனை வரையும் இரட்சித்தார்.

> "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" - சங்கீதம் 34:10.

> "நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம் பீர சத்தம் உண்டு. கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ் செய்யும்" - சங்கீதம் 118:15.

# வெற்றி வாழ்க்கை

நாங்கள் கடந்து வந்தப் போராட்டமான, துக்கமான வாழ்க்கையில் கர்த்தர் எங்களோடிருந்து, தம்முடைய வை ராக்கியத்தினிமித்தம் எங்களை ஆசீர்வதித்து, வெற்றியின் பாதையில் நடத்தினார். நாங்கள் இயேசுவையே சார்ந்திருந்த படியால் சமாதானமும், சந்தோஷமும், பரிசுத்தமும், தேவ ஆசீர்வாதமும் எங்கள் குடும்பத்தில் நிறைந்திருந்தது. நானும், என் கணவரும் எங்கள் வாழ்க்கையில் ஆதரிக்க ஆளின்றி அனாதைகளாகக் கஷ்டப்பட்டதால், வாழ்வில் அதிகமாக நொறுக்கப்பட்டதால் ஆதரிக்க ஆளின்றி கலங்கும் அனா தைப்பிள்ளைகளின் மேல் மனதுருகுகிறோம். இயேசுகிறிஸ்து என் கணவரின் ஆவியை மூன்றாம் வானத்திற்கு எடுத்துச் சென்றபோது ஜாதி, மத, இன, தகுதி வித்தியாசம் பார்க்கக் கூடாது என்று கூறியபடி நாங்கள் ஜாதி, மத, இன, தகுதி வித்தியாசமின்றி எங்களை நாடி வரும் அனைவரையும் பார பட்சமின்றி நேசிக்கிறோம். ஆதரவற்ற அநேகப் பிள் ளைகளை ஏற்றுக் கொண்டு அவர்களை எங்கள் பிள்ளை களைப்போல கர்த்தருக்குள் வளர்க்கிறோம். அவர்களுக்கு எங்களால்இயன்றவரை உதவி செய்கிறோம்.

தேவனுடைய ஆசீர்வாதம் எங்கள் இல்லத்தில் பெருக, பெருக பிசாசானவனும் எங்களை நொறுக்கத் திட்டமிட்டு என் சரீரத்தில் பல்வேறுவிதமான வியாதிகளைத் தந்து உபத்திரவப்படுத்த ஆரம்பித்தான். எனக்கு சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டது. நன்கு சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். ஆயினும் நான் என் வியாதியைப்பற்றி என் கணவரிடம்கூட சொல்லாமல் சகித்துக் கொண்டிருந் தேன். என் கணவர் காலையில் 7 மணிக்கு வேலைக்குச் சென்றால் இரவு 12மணிக்குமேல்தான் வீட்டிற்கு வருவார். வந்தவுடன் அவர் தேவசமூகத்தில் காத்திருந்து ஜெபிப்பார். ஆகவே நான் அவரைத் தொந்தரவு செய்ய மாட்டேன். இறுதியில் ஒருநாள் வேதனை தாங்க முடியாமல் எங்கள் பரிசோதனை நிலையத்தில் வேலை செய்து கொண்டிருந்த நாங்கள் வளர்த்து வந்த பையனிடம் ஒரு டியூப் கொண்டு வரச் சொல்லி அதில் பரிசோதனைக்காக சிறுநீர் எடுத்துக் கொடுத்தேன். அந்த சிறுநீர் சுண்ணாம்பு நீர் போல் இருந்

தது. அதைப் பார்த்து என் கணவரே அதிர்ச்சியடைந்து விட்டார். சிறுநீர் முழுவதும் puscells இருப்பதாகக் கண்டு பிடித்தார். புகழ் பெற்ற மருத்துவ நிபுணர்களிடம் சிகிச்சைக்காகச் சென்றபோது அவர்கள் சிறுநீரகம் கெட்டு விட்டதென்றுச் சொல்லிவிட்டார்கள். என் கணவர் என்னைப் பார்த்து ''ஐயோ நான் என் வேலை பளுவினிமித்தம் உன்னைக் கவனிக்காமல் விட்டுவிட்டேனே. இப்பொழுது இவ்வளவு ஆபத்தான நிலை ஏற்பட்டு விட்டதே' என்று கண்ணீர் வடித்தார். கண்ணீருடன் இயேசுவை நோக்கி எனக்காக ஜெபித்தார். இயேசு அதைக் கேட்டு என்னை அற்புதமாக குணமாக்கி, எந்த சிறுநீரகக் கோளாறும் (Renal Failure) ஏற்படாதவாறு காத்தார்எவ்வளவு சோதனைகளும், கஷ்டங்களும் எங்களுக்கு வந்தாலும் நாங்கள் எங்கள் நம்பிக்கையில் தளரவில்லை.

அதன்பின் என் தொண்டையில் ஒரு பெரிய கட்டி ஏற்பட்டது. பிசாசு வியாதியினால் என் சரீரத்தை நொறுக்கினான். எதையும் விழுங்க முடியாமல், சாப்பிட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். எனக்கு இருதய படபடப்பு அதிகமாக இருந்தது. என்னால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. உடனே புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களிடம் சென்றபோது அவர்கள் நன்கு பரிசோதனை செய்துவிட்டு எனக்குத் தொண்டையில் புற்றுநோய் கட்டி இருப்பதாகவும், உடனே வேலூர் மருத்துவமனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்கள். அவ்வளவுதான். மரணத்திகில் என்னைப் பிடித்துக் கொண்டது. நான் இறந்துவிட்டால் கபடறியாத என் கணவரின் நிலை என்னவாகுமோ?'' என் இரு பெண் குழந்தைகள் தாயில்லாப் பிள்ளைகளாக தாயின் அன்பு கிடைக்காமல் தவிப்பார்களோ? அவர்கள் எதிர்காலம் என்னவாகுமோ?'' என்று கலங்கினேன். கண்ணீரும், திகிலும் என்னைச் சூழ்ந்திருந்தது. தொண்டை வேதனை நாளுக்கு நாள் அதிகரித்தது. 1985-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஒரு செவ்வாய்க்கிழமை இரவு 7-50 மணியளவில் ''இயேசுவே, நீர் என் உயிரை எடுத்துக்கொள்வீரானால் அதைக் குறித்து என்னோடு பேசும். நான் என் பிள்ளைகளுக்கு இறுதியாக உம்மைக்குறித்து ஆணித்தரமாக சொல்ல வேண்

டும். இல்லையெனில் என்னைக் குணமாக்கும், நான் உம்மையே நம்பியிருக்கிறேன். உம்மையன்றி எனக்கு ஆறுதல் ஒருவருமில்லை என்று கதறினேன். அப்பொழுது ''மகளே, ஏசாயா 54-ம் அதிகாரத்தை எடுத்துப்படி. அதிலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் நான் உனக்குத் தருகிறேன். உன் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது'' என்ற சத்தம் கேட்டது. என் கையிலிருந்த வேதத்தில் நான் திருப்புவதற்கு முன்பே ஏசாயா 54-ம் அதிகாரம் என் கண்முன் நின்றது. அதிலுள்ள ஒவ்வொரு வசனங்களும் தேவன் என்னோடு நேரில் பேசுவதுபோல் இருந்தது. உடனே தெய்வீக சமாதானம் என்னை நிரப்பியது. என் வியாதி என்னை விட்டுப் போய்விட்டதுபோல் இருந்தது.

என் கணவரோ ''இவள் மரித்து விட்டால் நம் நிலையும், பிள்ளைகளின் நிலையும் என்னவாகும்? ஊழியப் பாதையில் யார் நமக்கு உறுதுணையாயிருந்தது. ஊக்குவிப்பார்? என்று மிகவும் கலக்கத்துடன் இருந்தார். கொடிய மஞ்சள் காமாலை வியாதியினால் மரணப்படுக்கையிலிருந்து என் கணவரின் ஜெபத்தின் மூலம் இயேசுவின் அற்புதத் தொடுதலைப் பெற்று சுகமான ஒரு சகோதரன் அச்சமயம் என் கணவரைப் பார்க்க வந்திருந்தார். அப்பொழுது என் கணவரின் முகத்தில் கவிந்திருந்த துக்கத்தைக் கண்டு நீங்கள் துக்கமாயிருக்கக் காரணம் என்ன என்று விசாரித்தார். என் சுகவீனத்தைப் பற்றி என் கணவர் மூலம் அறிந்து தன் உறவினர் வேலூரில் மருத்துவக் கல்லூரியின் முதல்வராக (principal of the CMCH) இருப்பதாகச் சொல்லி அவருக்கும் என்னைப் பற்றிக் கடிதம் எழுதினார். உடனே எங்களையும் வேலூர் C.M.C மருத்துவமனைக்குப் போகும்படிச் சொன்னார். அதன்படி நானும், என் கணவரும் அங்கு சென்றோம். என்னைப் பரிசோதித்த புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் உடனே அறு வைசிகிச்சை செய்ய வேண்டும் என்றும், அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் எந்த முடிவுக்கும் வர இயலாது என்றும் சொல்லி விட்டார்கள். அவர்களும் கேன்சராக இருக்குமோ என்று சந்தேகப்பட்டார்கள். தொண்டையில் பெரிய அறுவை சிகிச்சை செய்வதால் தொண்டையிலிருந்து சத்தமே தெளிவாக வராது என்று அநேகர் சொன்னார்கள். ஆகவே நான் அறுவை சிகிச்சைக்குப் பின்னும் என் குரலில் மாற்றம் ஏற்படாம

லிருந்தால் வாழ்நாள் முழுவதும் இயேசுவுக்காகப் பாடுவே னென்றுப் பொருத்தனை செய்தேன். நான் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட பின்னும் என் கணவர் என் அருகில் இருக்கமுடியவில்லை. ஏனெனில் அங்கு படித்துக் கொண் டிருந்த அநேக நர்ஸஸ் மற்றும் டாக்டர்களும் ஜெப உதவி நாடி என் கணவரிடம் வந்ததால் அவர் நானிருந்த அறை யில் இருக்கவே முடியாது. அங்கேயும் இயேசுவின் ஊழியம் நடைபெற்றது. ஆனால் ஜெபத்திற்காக எங்களை நாடி வந்த அநேக சகோதரர்களும், சகோதரிகளும் கிறிஸ்துவின் நாமத்தில் என்னைச் சொந்த சகோதரியாக எண்ணி கவனித் துக் கொண்டார்கள். நான் தனிமையாக மருத்துவமனை யில் இருந்த நேரங்களிலும் இயேசு என்னோடு கூடவே இருந்தார்.

இறுதியில் ஆபரேஷன் தியேட்டருக்கு என்னைக் கொண்டுபோய் மயக்க ஊசி போட்டார்கள். அப்பொழுது நானிருந்த இடத்திற்கு மேலே இயேசுவைக் கண்டேன். அவருடைய கண்கள் என்னையே நோக்கிக் கொண்டிருந் தது. நான் அதைப் பார்த்துக் கொண்டே மயக்கநிலையை அடைந்தேன். அந்த மருத்துவமனையின் முதல்வர் சுமார் 6 மணி நேரம் எனக்கு அறுவைசிகிச்சை (Major Surgery) செய்து தொண்டையிலிருந்த கட்டியை வெளியே எடுத்தார். உடனே அதை ஒரு பரிசோதனைக்கு (Biopsy) அனுப்பினார் கள். அந்த பரிசோதனையின் முடிவு வந்தது. அது எனக்குக் கேன்சர் இல்லையென உறுதிப்படுத்தியது. மேலும் என் குரல் அறுவைசிகிச்சைக்கு முன் இருந்ததைப் போலவே இருந்ததேயொழிய அதில் ஒரு மாற்றமும் இல்லை. ஆகவே நான் என் பொருத்தனையின் படியே இயேசுவுக்காகப் பாடல் களைப்பாட என்னை அர்ப்பணித்தேன். அவர் தம் கிருபை யினால் எனக்குப் பாடக்கூடிய வரத்தைத் தந்து நான் பாடி தேவ நாமத்தை மகிமைப்படுத்த அனுக்ரகம் செய்திருக்கிறார் நான் பாடி அநேக பாடல் கேசட்டுகளை வெளியிடவும் இயேசு கிருபை செய்திருக்கிறார்.

> ''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக் கப் பண்ணி எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்''
>
> -II கொரிந்தியர் **2:14.**

இப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் எனக்கன்பான சகோதரிகளே, நீங்களும் என்னைப்போலக் கண்ணீரின் பள்ளத்தாக்கில் கடந்து வந்து கொண்டிருக்கிறீர்களோ? பல்வேறு கஷ்டங்களும், சமாதானமின்மையும், கணவரால் வரும் துன்பங்களும், பிள்ளைகளின் கீழ்ப்படியாமையால் ஏற்படும் கஷ்டங்களும், வியாதிகளும், வறுமையும் உங்களை நெருக்குகிறதோ? இவற்றினிமித்தம் வாழ்வே கசந்து தற்கொலை செய்து கொள்ளலாமா என்று எண்ணுகிறீர்களோ? மனம் கலங்காதீர்கள். உங்களுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்த இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் உங்கள் மேல் மனதுருகுவார். எல்லாப் பிரச்சனைகளிலிருந்தும் உங்களை விடுதலையாக்குவார். அவர் உங்கள் கண்ணீரைக் களிப்பாக மாற்றுவார். வெற்றியுள்ள வாழ்க்கையை உங்களுக்குத் தருவார்.

''என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்'' - சங்கீதம் 30:11, 12.

## அன்பரின் ஊழியத்தின் ஏனைய வெளியீடுகள்

**புத்தகங்கள்**

1. இயேசு தரும் எல்லையில்லா சமாதானம் - ரூ. 10/-
2. Boundless peace that Jesus gives - ரூ. 10/-
3. கடன் தீர்க்கும் இயேசு - ரூ. 10/-
4. ஞானமும், வெற்றியும் -ரூ. 6/-
5. தெய்வன்பின் வெள்ளமே - ரூ. 5/-
6. துயர்துடைத்து வாழ்வில் உயர்த்தும் இயேசு - ரூ. 6/-
7. 2 மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இந்தியா ரூ. 25/- அன்பரின் ஊழியம் பத்திரிகை வருட நன்கொடை

   (வெளிநாடு) வருட நன்கொடை ரூ. 200/-
8. அன்புப் பறவைகளின் பாடல்கள் (பாடல் புத்தகம்) ரூ. 10/-

**ஒலிநாடாக்கள்**

1. உண்மை அன்பு - ரூ.25/-
2. இயேசுவால் உனக்கு ஓர் அற்புதம் - ரூ.35/-
3. வாலிபர்களை உயர்த்தும் இயேசு - ரூ.25/-
4. ஆண்டு முழுவதும் ஆசீர்வதிக்கும் அன்பின் கரங்கள் - ரூ.25/-
5. வெற்றிதரும் உபவாசம் - ரூ.35/-
6. பாதை காட்டும் தீபம் - ரூ.35/-
7. காரிருளில் மெய் ஒளி இயேசு - ரூ.25-
8. தூய ஆவியின் கனிகளும், வரங்களும் - ரூ.35/-
9. சுமந்து காக்கும் இயேசு - ரூ.35/-
10. ஆசீர்வாதமான அன்பின் குடும்பம் I, II - ரூ.25/-

அன்பரின் ஊழியத்திப் புத்தகங்களோ, ஒலி நாடாக்களோ உங்களுக்கு வேண்டுமானால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சகோ. ஆனந்தஸ்திரா, (காவேரி மினி சூப்பர் மார்க்கெட் எதிரில்)
D.14, 3-வது மெயின்ரோடு, உறையூர்,
இராமலிங்க நகர், திருச்சி-3.